**Previous Examination date – 2-7-09**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate,Palani.**

**C.C. 113-04**

**Deposition of Witness P. W . 11**

| | |
|---|---|
| **Name: ஜாபர்சாதிக்** | **Father/Husband's Name: இதயதுல்லா** |
| **Village:** | **Taluk:** |
| **Caste:** | **Calling:** |
| **Religion:** | **Age:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 02-09-2021**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் கீரனுாரில் குடியிருந்து வருகிறேன், ஜெராக்ஸ் கடை வைத்துள்ளேன். 2002-ம் வருடம் எஸ்.டி.டி பூத் வைத்திருந்தேன். எனது ஜெராக்ஸ் கடையின் பெயர் வி,எஸ் ஆகும். வழக்கு சம்மந்தமாக எனக்கு 2002-ம் வருடம் எதுவும் தெரியாது. போலிசார் தற்போது வந்து சம்மன் கொடுத்தபோது தான் எனது பெயர் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள விவரம் தெரிய வந்தது. பாலகுமாரின் அப்பா கருணாகரன் என்பவர் எனது கடைக்கு வருவார். அவரை எனக்கு தெரியும். பாலகுமாரை தெரியாது. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது.**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**2002-ல் வி.சி.ஆர். மற்றும் வி.சி.டி வந்த விவரம் எனக்கு தெரியும். ஆடியோ கேசட் வந்த விவரம் தெரியும். 2002-ல் செல்போன்கள் அதிகமான பயன்பாட்டில் இல்லை என்றால் சரிதான். வீடியோ கேசட்டுகளைஹம் அதை போட்டு பார்க்கும் டெக் என்பதையும் வாடகைக்கு விடுவார்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் அவ்வாறு கேசட்டுகளை வாடகைக்கு விடுவார்கள். யார் யார் என்று எனக்கு தெரியாது. எனது நண்பர்கள் காதர், அபுல்கசன், காதர்ஒலி ஆகியோர் ஆவார்கள். தற்போது எனக்கு 47 வயதாகிறது. 21 வயதில் எனக்கு கிரிக்கெட் விளையாடுவர்கள் நண்பர்களாக இருந்தார்கள். பழனிச்சாமி மகன் காமராஜ், சின்னு மகன் துர்க்கைராஜ், கந்தசாமி மகன் தெட்டிசின்னு எங்களது கடைக்கு வருவார்கள் என்றால் சரியல்ல.**

அவர்களை எனக்கு தெரியாது. பாலகுமாரை எனக்கு தெரியாது. கருணாகரன் மகன் இருக்கிறாரா அல்லது இறந்துவிட்டாரா என்பது பற்றி எனக்கு தெரியாது. கருணாகரனுக்கு இரண்டு மகன்கள். அதில் பாலகுமார் இறந்தது எனக்கு தெரியும். அவரது நண்பர்கள் துர்க்கைராஜ், காமராஜ் ஆகியோரை தெரியாது. பாலகுமார் இறந்து சடலத்தை எடுத்து சென்றபோது தெரியும். அது நடந்து சுமார் 20 வருடம் இருக்கும். எப்படி இறந்தார் என்பதுபற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா எனது கடையை பார்த்துக் கொள்வார் என்றால் சரிதான். சாகுல்உறமீது நண்பரா, உறவினரா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது கடையில் வைத்து வீடியோ கேசட்டை வாடகைக்கு விட்டதில்லை. நான் சாகுல்உறமீதிடமிருந்து வீடியோகேசட்டை வாங்கி உள்வாடகைக்கு விட்டு வந்தேன் என்றால் சரியல்ல. ஆபாச வீடியோக்களை எனது அப்பாவுக்கு தெரியாமல் நான் வாடகைக்கு விடுவேன் என்றால் சரியல்ல. 23–12–02–ம் தேதி எனது நண்பர் காமராஜ், சாமிதுரை, துக்கையன், முனியப்பன், தொட்டிசின்னு, இறந்துபோன பாலமுருகன் ஆகியோர் என்னிடம் வந்து ஆபாச பட கேசட்டை கேட்டார் என்றும், நான் அதை சாகுல்உறமீதிடமிருந்து வாங்கி கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> –இல்லை.